# Determinants of market participation: Special reference to paddy farmers in Verugal Division

# சந்தைப் பங்குபற்றலைத் தீர்மானிக்கும் காரணிகள்: வெருகல் பிரதேச நெல் விவசாயிகளை அடிப்படையாக கொண்ட ஆய்வு

Suventhiran, K[a] and Karunaanithy, K[b]

*[a]Graduate, University of Jaffna, Sri Lanka*
*[b]Department of Economics, Faculty of Arts, University of Jaffna, Sri Lanka*

[b]kkamal@univ.jfn.ac.lk

## Abstract

The study entitled "Factors Determining Market Participation of Paddy Farmers" in the Verugal Divisional Secretariat, Trincomalee District aims to identify the factors that determine the market participation of paddy farmers in the Verugal area and how they relate to and influence market participation; Market share is determined by the amount that paddy farmers sell in their produce. Questionnaires were provided to 100 paddy farmers on a proportionate basis and the data on latent variables were collected through a 5-point Likert-type scale. The results were obtained through regression analysis and descriptive analysis. Thus, the farmer's monthly income, the farm's size is significant and positively influences at 1% level, whereas the farmer's family members, the distance to the market are negatively and significantly influence at 5% level. Meanwhile, the farmer's level of education and the farmer's age negatively influence market share at a 10% significant level. Market information and farmer credit use have a moderate impact on the paddy farmer's market share, while road infrastructure facilities and output cost have a high impact on the farmer's market share. The lowest impact is on the farmer's livestock income and non-farm income. These have highlighted the nature of paddy farmers' market participation in the Verugal area and the factors that determine them. Therefore, it is best to consider not only the use of Western technology in the process of modernization of paddy.

*Keywords: market share, paddy farmers, farm size and monthly income*

## ஆய்வின் அறிமுகம்

இயற்கை வளம் நிறைந்த திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் வலயத்தில் ஒரு பிரிவான வெருகல் பிரதேச செயலகப் பிரிவினுள் உள்ளடங்கும் 10 கிராமசேவை பிரிவிலும் நெல் விவசாயமானது முக்கியமானதாகவும் சாத்தியமான தொழிலாகவும் காணப்படுகின்றது. இங்குள்ள 3873 குடும்பங்களினதும் பிரதான தொழிலாக நெற்செய்கையே காணப்படுகின்றது. இங்குபயிரிடு நிலப்பரப்பான 1586.67 ஹெக்டெயரில், நெற்பயிற்செய்கையானது 1400 ஹெக்டெயர் நிலப்பரப்பில் செய்கையாகி, 5,404 மெட்ரிக்தொன் வெளியீடு பெறப்படுகின்றது. நாட்டின் உணவு அதிகரிப்பில் பங்களிப்பினை ஆற்றுகின்ற இவ்வுற்பத்தியை விருத்தி செய்வதற்கு அரசு பல முறையில் உதவினாலும் பிரதேசத்தில் சந்தை

வாய்ப்பின்மை விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை குறைப்பதோடு இடையீட்டாளர்கள் மூலம் அதிகளவு சுரண்டப்படுவதற்கு சாதகமாக அமைகின்றது (கமநலசேவை நிலைய பதிவேடு, பூநகர், 2019).

இங்கு விவசாயமானது ஒரு மரபு ரீதியான தொழிலாகவும் விவசாயச் செய்கையானது பாரம்பரிய முறையில் இருந்தாலும் நவீன உள்ளீடுகளின் பாவனை படிப்படியாக அதிகரித்து வருகின்றது. ஆயினும் இப்பிரதேச விவசாய உற்பத்திகளின் சந்தைப்படுத்தல் தொடர்பான அறிவு விவசாயிகள் மட்டத்தில் குறைவாக உள்ளமையால் விவசாயத்திலிருந்தான தேறிய வருமானமும் குறைவாக உள்ளது. விற்பனை வசதிகள் ஒழுங்கற்றதும் விவசாயிகளால் அடைய முடியாத நிலையிலும் காணப்படுகின்றதுடன், களஞ்சிய வசதியும் இல்லை. பயிர்ச்செய்கைக்கு உரிய காலப்பகுதியில் உரிய வசதி வாய்ப்புக்கள் கிடைக்காமையால் தகுந்த விளைச்சலை பெற முடியாமலும் மிகை உற்பத்தியை வழங்க முடியாமலும் உள்ளது. மகாவலி கங்கையால் நீர்ப்பாசனம் பெறும் வெருகல் பிரதேசத்தில் நெல் உற்பத்தியானது பிரதான வருமான மூலமாகவும் குறைந்த உள்ளீட்டு செலவுடன் அதிக இலாபத்தை பெறக்கூடிய வழிமுறையாகவும் குறுகியகால இடைவெளியை கொண்டதாகவும் காணப்படுகிறது. எனினும் பயிர்செய்கை மற்றும் சந்தைப்படுத்தல் தொடர்பில் மக்களினுடைய செயற்பாடு குறித்த முழுமையான தரவுகள் காணப்படாத நிலையில் இவ்வாய்வானது குறித்த பிரதேச விவசாயிகளுக்கும், நிறுவனங்களுக்கும், பிரதேச அபிவிருத்தி மற்றும் சந்தைப்படுத்தல் விரிவாக்கம் தொடர்பிலான அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு உதவக் கூடிய, மிக முக்கியமான தொன்றாக காணப்படுகின்றது.

முழுமையானதொரு விவசாய பிரதேசமாக காணப்படுகின்ற இப்பிரதேசத்தில் அனைவருக்கும் சாத்தியமான உற்பத்தி வாய்ப்பாக நெல் விவசாய உற்பத்தி காணப்படுகின்றது. அதாவது நிலத்தின் கிடைப்பனவு மற்றும் நீர்ப்பாசன வசதி காரணமாக நெல் உற்பத்தியில் ஈடுபடக்கூடிய சாதக வாய்ப்பினைக் கொண்டுள்ளதுடன் யுத்த நிறைவைத் தொடர்ந்து ஏற்பட்ட சூழல் ரீதியான அநுகூல நிலைமையும் விவசாய உற்பத்தியை அதிகரித்தது. இக்காரணிகளின் தள்ளுமற்றும் இழுவிசைகளால் படிப்படியாக சந்தைப்படுத்தலை நோக்கிய உற்பத்தி ஆரம்பித்தது. இருப்பினும் மக்கள் தமது உற்பத்திக்கான சிறந்த சந்தைவாய்ப்பினை அடைவதற்கான வசதி வாய்ப்பானது இன்னும் முழுமையடையாத நிலையில் காணப்படுகின்றது. இந்நிலையானது நெல் விவசாயிகள் தமது உற்பத்திகளை மிகத ̇தொலைவில் உள்ள சந்தைகளை அடிப்படையாக கொண்டு செயற்பட நிர்ப்பந்திப்பதுடன் அவர்களின் வருமானத்தில் தாக்கத்தை ஏற்படுத்துவதாகவும் காணப்படுகின்றது. மேலும் தொலைவில் உள்ள சந்தையில் உற்பத்திக்கு வழங்கப்படும் விலையை காட்டிலும் அதிகவிலை அருகில் உள்ள சந்தையில் வழங்கப்பட்ட போதும் அதை அவர்கள் அறியாமலுள்ளனர். எனவே அதிகரித்து வருகின்ற உற்பத்திகளைக் கொண்டு நெல் விவசாயிகளின் சந்தைபங்குபற்றல் தீர்மானம் எவ்வாறு காணப்படுகின்றது மற்றும் பங்குபற்றலில் செல்வாக்கு செலுத்தக்கூடிய காரணிகள் எவை என இனங்காண்பதை பிரதான நோக்கமாகக கொண்டு இவ்வாய்வு முன்னெடுக்கப்பட்டுள்ளது. மேலும், வெருகல் பிரதேசநெல் விவசாயிகளின்

சந்தைபங்குபற்றலில் சமூக, பொருளாதார, சந்தைசார் மற்றும் உற்பத்திக் காரணிகள் எவ்வாறு தாக்கம் செலுத்துகின்றன என்பதை உப நோக்கங்களாககொண்டுள்ளது.

## முன்னைய ஆய்வுகளின் மீளாய்வு

சந்தைப்படுத்தல் பற்றிய நவீன வரை விலக்கணமானது ''சந்தைப்படுத்தல் என்பது மனிதநடத்தையின் மூலம் தேவை விருப்பங்கள் என்பவற்றின் எதிர்பார்க்கை முகாமை ஆகியவற்றின் திருப்தி போன்ற பரிமாற்ற செயன்முறையின் வழிநடத்தலாகும்'' எனக் கூறுகின்றது. Soe மற்றும் பலர் (2015) நெல் சந்தைப்படுத்தலை தீர்மானிக்கும் காரணிகள் என்றதலைப்பில் மேற்கொண்ட ஆய்வில் மியன்மாரில் உள்ள நெல் விவசாயிகளை அடிப்படையாகக் கொண்டு முதன்நிலை தரவுகளை பெற்று Multinomial logit model பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்வின் முடிவாக குறைந்த உட்கட்டமைப்பு வசதிகள், சந்தைப்படுத்தல் வசதிகள், போதியளவு கடனைப் பெற்றுக் கொள்ள முடியாமை, சந்தைத கவலை பெற்றுக் கொள்ள முடியாமை, மற்றும் சந்தைக் கட்டமைப்பு சிலர் உரிமையாக காணப்பட்டமை போன்ற காரணங்களால் நெல் சந்தைப்படுத்தல் பாதிக்கப்படுகிறது என்கின்றனர். Hussain (2012) பண்புசார் மற்றும் விபரணப் புள்ளிவிபரவியல் மூலம் நெற ் செய்கையில் சிறந்த பயனைப ் பெறவேண்டுமாயின் உள்ளீடுகளான கடன், பயிரிடு நிலம் மற்றும் உரப் பாவனையும், நீர ் பாவனையும் அவசியமானது எனும் போது, பிரசன்னாவும் அவரது குழுவினரும் (2012) லொஜிற் மாதிரியம் மூலம் வடமத்திய மாகாணத்தில் நெல் கொள்வனவு சக்தியானது சிலருடைய கையில் தங்கியிருப்பதும் நிலமானது சிலருடைய உரிமையில் இருப்பதாலும் மற்றும் விவசாய செயற்பாடுகளுக்காக விவசாயிகள் முறைசாரா சந்தையில் அதிகம் கடன் பெறுவதாலும் இவர்கள் நெல் சந்தைப்படுத்தல் மூலம் அதிக இலாபம் பெறமுடியாமல் காணப்படுகின்றனர் எனக்கண்டுள்ளனர். மேலும் கேகாலை, குருநாகலை மாவட்டங்களில் அகியார் (2017) மேற்கொண்ட விபரணப் புள்ளிவிபரவியல ஆய்வு நெற்செய்கையில் கூலிக்கான செலவு, உரம் மற்றும் கிருமிநாசினிக்கான செலவு உயர்வாகக் காணப்படல், உற்பத்தி இயந்திரம் காணப்படாமை மற்றும் விவசாயிகளின் கல்வியறிவு குறைவுபோன்றதனால் உற்பத்திசெலவு அதிகமாகும் என்கிறது. இதேபோல், மஹ்ரூபா மற்றும் செனவிரத்ன (2014) ஆய்வு முடிவுகள் குறைவான தொழிநுட்ப சாதனங்களை பயன்படுத்தும் விவசாயிகளுக்கும் சந்தைத கவல்களுக்கும் இடையே இடைவெள ிஅதிகளவு காணப்படுகிறது என தெரிவிக்கின்றது.

## ஆய்வுக் கருதுகோள்கள்

$H_{1A}$: வெருகல் பிரதேசத்தில் நெல் விவசாயிகளின் சந்தைபங்குபற்றுதலில் சமூகக் காரணிகள் தாக்கம் செலுத்துகின்றன.

$H_{2A}$: வெருகல் பிரதேசத்தில் நெல் விவசாயிகளின் சந்தைபங்குபற்றுதலில் சந்தைக் காரணிகள் தாக்கம் செலுத்துகின்றன.

$H_{3A}$: வெருகல் பிரதேசத்தில் நெல் விவசாயிகளின் சந்தைபங்குபற்றுதலில் உற்பத்திகாரணிகள் தாக்கம் செலுத்துகின்றன.


$H_{4A}$: வெருகல் பிரதேசத்தில் நெல் விவசாயிகளின் சந்தைபங்குபற்றுதலில் பொருளாதாரகாரணிகள் தாக்கம் செலுத்துகின்றன.

**ஆய்வுமுறையியல்**

ஆய்வின் நோக்கங்களுக்கமைவாக கருதுகோள்களும் முன்வைக்கப்பட்டு, ஆய்வுப பிரதேசத்தில் சந்தைப் பங்குபற்றலுடன தொடர்புபட்ட காரணிகளை சந்தைக்காரணி, சமூகக்காரணி, பொருளாதாரக்காரணி, உற்பத்திக்காரணி என வகைப்படுத்தப்பட்டு ஆய்வு செய்யப்படுகின்றது. ஆய்வாளனின் செயல் நிலை ஆய்வின் போது இனங்காணப்பட்ட நெல் உற்பத்தியாளர்களின் சந்தைப பங்குபற்றலை தீர்மானிக்கும் காரணிகள் பற்றிய ஆய்வில் முதலாம் நிலைத்தரவுகள் மற்றும் இரண்டாம் நிலைத்தரவுகள் சேகரிக்கப்பட்டு பகுப்பாய்வு செய்யப்படுகின்றன. இவ்வாய்விற்காக வெருகல் பிரதேசசெயலகப் பிரிவிற்குள் உள்ளடக்கப்படும் மூன்று விவசாயப் போதனாசிரியர் பிரிவுகளை அடிப்படையாக கொண்டு மாதிரித் தெரிவானது இடம் பெற்றுள்ளது. மேலும் இங்கு ஆய்விற்காக 100 மாதிரிகள் தெரிவு செய்யப்பட்டு அதனடிப்படையில் ஆய்வானது முன்னெடுக்கப்பட்டுள்ளது. அந்தவகையில் மொத்த சனத்தொகையில் விவசாயச செய்கையில் ஈடுபடும் மொத்த குடும்பங்களான 3316 குடும்பங்களினை அடிப்படையாகக் கொண்டுமாதிரித் தெரிவானது இடம்பெற்றுள்ளது. அந்தவகையில் விகிதாசார ரீதியில் எழுமாற்று மாதிரிளடுப்பை பயன்படுத்தி, மொத்த மாதிரி தொகையில் 5 சதவீதத்தை பயன்படுத்தி (100 பேர்) மையப்படுத்தி 100 விவசாயிகள் மாதிரியாக தெரிவுசெய்யப்பட்டு ஆய்வுக்குட்படுத்தப்பட்டனர்.

இவ்வாய்வில் தரவுப் பகுப்பாய்வானது பிரதானமாக மூன்று பகுதிகளாக கட்டமைக்கப்பட்டுள்ளன. அந்தவகையில் முதலாவது பகுதியில் விவரணப் புள்ளிவிபரவியல் பகுப்பாய்வு நுட்பத்தினைப் பயன்படுத்தி மாதிரிகளின் பண்புகள் மற்றும் அவர்களின் உற்பத்திமற்றும் சந்தை தொடர்பான விடயங்கள் அவை தொடர்பான தரவுகள் போன்றவை பகுப்பாய்வு செய்யப்படுகின்றன. இரண்டாவது பகுதியில் ஆய்வுப் பிரதேசத்தில் நெல் உற்பத்தியாளர்களின் சந்தைப பங்குபற்றலைத் தீர்மானிக்கும் காரணிகள் குறித்த விளக்கத்தினைப் பெறுவதற்காக பிற்செலவுப் பகுப்பாய்வு முறையானது பயன்படுத்தப்படுகிறது. இந்நிலையில் சார்ந்த மாறியான சந்தைப்பங்குபற்றலும் சாரா மாறிகளான சந்தைப் பங்குபற்றலைத் தீர்மானிக்கும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய மாறிகளையும் மதிப்பிடுவதற்கு இங்கு பிற்செலவு பகுப்பாய்வானது பயன்படுத்தப்பட்டுள்ளது. மேலும் ஏனைய சிலகாரணிகள் மூன்றாவது பகுதியிலே Likert Scaling முறையினைப் பயன்படுத்தி சந்தைப்பங்குபற்றலை தீர்மானிக்கும் விதம் பற்றிவிளக்கப்பட்டுள்ளன.

**மாதிரிஎடுப்பு**





உரு 1. மாதிரி எடுப்பு


பல ˙மாறிபிற்செலவு பகுப்பாய்வு முறையானது 5 புள்ளி Likert scale கூற்றுக்களை STATA கணினி மென்பொருளின் ஊடாகப் பகுப்பாய்வு செய்து SPSS மென் பொருளின் மூலமும் விவசாயிகளின் தனிப்பட்டத் தரவுகள் MS Excel இன் உதவி கொண்டும் பகுப்பாய்வுசெய்யப்பட்டுள்ளது.

## ஆய்வின் முடிவுகள்

(a)




(b)




உரு 2(a):நெல்விவசாயிகளின் பால்நிலை     உரு 3(b):நெல்விவசாயிகளின் குடும்பஅங்கத்தவர்

**பல்மாறிபிற்செலவுபகுப்பாய்வுமுடிவுகள்**

$Y = β0 + β_1AG + β_2ED + β_3WG + β_4FM + β_5FS + β_6MI + β_7MD + Ui$

$Y = 83.998 - .2032\ AG - .4659ED + .0035\ WG - 1.1148\ FM + .7720\ FS + .0023\ MI - .2944\ MD$

Y =சந்தைப்பங்குபற்றல் (விவசாயிசந்தையில் விற்கும் நெல்லின் அளவு/மொத்தஉற்பத்தி)

இவ்வாய்வின் முடிவின்படி துணிவுக் குணகமானது 0.2738 ஆகக் காணப்படுகின்றது. கருத்தில் கொள்ளப்பட்ட சாரா மாறிகள் சார்ந்த மாறியான நெல் விவசாய உற்பத்தியாளர்களின் சந்தைப் பங்குபற்றலின் விலகலை 27% விளக்க கூடியதாக உள்ளன. ஆதே வேளை 73% சார்ந்த மாறியின் விலகலை ஆய்வில் உள்ளடக்கப்படாத ஏனைய மாறிகள் விளக்குகின்றதாக இருந்த போதிலும் சமூக விஞ்ஞான ஆய்வுகளைப் பொறுத்த வரையில் இவ்வாறான நிலையானது இயல்பான தொன்று எனவும் துணிவுக் குணகமானது உளவியல் ரீதியான சமூக ஆய்வுகளில் குறைவாக வருவதற்கான வாய்ப்புகள் உள்ளன. இவ்வாய்வில் பயன்படுத்தப்பட்டுள்ள சாரா மாறிகளில் ஒன்றை தவிர ஏனையவை பொருண்மைத்தன்மையைக் கொண்டுள்ளமையானது சாரா மாறிகளின் பொருத்தப்பாட்டினை விளக்குகின்றது.

அட்டவணை 1. பிற்செலவு ஆய்வின் முடிவுகள்

| மாறிகள் | பிற்செலவு குணகம் திப்புக்கள் | T பெறுமதி | நிகழ்தகவுப் பெறுமதி | நியமவழு |
|---|---|---|---|---|
| விவசாயியின் வயது(AG) | -.2031776* | -1.89 | 0.062 | .107529 |
| கல்விகற்றவருடங்கள் (ED) | -.4659281* | -1.55 | 0.100 | .300261 |
| வழங்கப்படும் கூலியளவு (WG) | .0035158 | 0.71 | 0.481 | .004964 |
| குடும்மபஅங்கத்தவர் எண்ணிக்கை (FM) | -1.114834** | -2.36 | 0.020 | .472451 |
| பண்ணையின் அளவு. (FS) | .7720053*** | 2.90 | 0.005 | .266243 |
| மாதாந்தவருமானம் (MI) | .0022782 *** | 4.22 | 0.000 | .000529 |
| re;ijf;fhdJ\u0bb0uk; (MD) | -.2944291** | -2.49 | 0.015 | .118477 |
| வெட்டுத்துண்டு | 83.99758 | 9.05 | 0.000 | 9.28610 |
| துணிவுக்குணகம் $R^2$: | 0.2738 | | | F பெறுமதி : 4.52 |

*** 1% பொருண்மைமட்டம் , ** 5% பொருண்மைமட்டம் , *10% பொருண்மைமட்டம்.

இவ்வாய்வின் முடிவுகளைத் தொகுத்து நோக்கும் போது நெல விவசாய உற்பததியாளர்களின் சந்தைப் பங்குபற்றலைத் தீர்மானிப்பதில் நெல் விவசாய உற்பத்தியாளரின் கல்வி நிலை, மற்றும் விவசாயியின் வயது, விவசாயின் குடும்ப அங்கத்தவர் எண்ணிக்கை, சந்தைக்கான தூரம் போன்றவை எதிர்மறையான தாக்கத்தினையே செலுத்துகின்றன.

ஆய்விலே நெல் விவசாய உற்பத்தியாளர்களின் சந்தைப்பங்கு பற்றலில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளில் 1% பொருண்மை மட்டத்தில் பண்ணையின் அளவு மற்றும் நெல் விவசாய உற்பத்தியாளருடைய மாதாந்த வருமானம் ஆகியவை காணப்பட, 5% பொருன்மை மட்டத்தில் நெல் விவசாய உற்பத்தியாளரின் குடும்ப அங்கத்தவா் எண்ணிக்கையும் மற்றும் சந்தைக்கான தூரமும் காணப்படுகின்றன. 10% பொருண்மை மட்டத்தில் நெல் விவசாய உற்பத்தியாளர்களின் வயது, நெல் விவசாயினுடைய கல்விநிலை ஆகியவை காணப்படுகின்றன.

## கருதுகோள் பரிசீலனை முடிவுகள்

### கருதுகோள் பரிசீலனை-01

$H_{1A}$: வெருகல் பிரதேசத்தில் நெல் விவசாயிகளின் சந்தைபங்குபற்றுதலில் சமூகக் காரணிகள் தாக்கம் செலுத்துகின்றன. (விவசாயியின் வயது, விவசாயின் கல்விநிலை, விவசாயின் குடும்ப அங்கத்தவர் எண்ணிக்கை)

பிற்செலவு ஆய்வு முடிவுகளின் படி ஏனைய காரணிகள் மாறாத நிலையில் நெல் விவசாய உற்பத்தியாளரினுடைய வயதானது மேலதிகமாக ஒரு அலகினால் அதிகரிக்கும் போது நெல் விவசாய உற்பத்தியாளரின் சந்தைபங்குபற்றலானது -.2031776 அலகினால் வீழ்ச்சியடையும். மேலும் சார்ந்த மாறியான நெல ் விவசாயிகளின் சந்தைப்பங்குபற்றலில் சாரா மாறியான விவசாயியின் கல்வி நிலையானது ஏற்படுத்தியுள்ள தாக்கத்தினை விளக்கும் பிற்செலவு குணக மதிப்பானின் பெறுமதி -.4659281 ஆகக் காணப்படுகின்றது. இதன்படி ஏனைய காரணிகள் மாறாத நிலையில் விவசாயியின் கல்வி நிலையானது மேலதிகமாக ஒரு அலகினால் அதிகரிக்கும் போது நெல் விவசாய உற்பத்தியாளரினுடைய சந்தைப்பங்குபற்றலானது -.4659281 அலகினால் வீழ்ச்சியடையும். அடுத்து, குடும்ப அங்கத்தவா் எண்ணிக்கையானது ஏற்படுத்தியுள்ள தாக்கத்தினை விளக்கும் பிற்செலவுக் குணக மதிப்பானின் பெறுமதியானது -1.114834 ஆகக் காணப்படுவதனால் ஏனைய காரணிகள் மாறாத நிலையில் நெல் விவசாய உற்பத்தியாளரினுடைய குடும்ப அங்கத்தவா் எண்ணிக்கையானது மேலதிகமாக ஒரு அலகினால் அதிகரிக்கும் போது நெல் விவசாய உற்பத்தியாளரின் சந்தைப்பங்குபற்றலானது -1.114834 அலகினால் வீழ்ச்சியடையும்.

### கருதுகோள் பரிசீலனை-02

$H_{2A}$: வெருகல் பிரதேசத்தில் நெல் விவசாயிகளின் சந்தை பங்குபற்றுதலில் சந்தைக் காரணிகள் தாக்கம் செலுத்துகின்றன (சந்தைக்கான தூரம், சந்தைத் தகவல்கள்).

சார்ந்த மாறியான சந்தைப்பங்குபற்றலின் மீது சாரா மாறியான சந்தைக்கான தூரம் ஏற்படுத்தும் தாக்கத்தினை விளக்கும் பிற்செலவு குணக மதிப்பானின் பெறுமதி -.2944291 ஆகக் காணப்படுகின்றது. இதன்படி ஏனைய காரணிகள் மாறாத நிலையில் நெல ் விவசாய உற்பத்தியாளரின் சந்தைக்கான தூரம் ஒரு அலகினால் மேலதிகமாக அதிகரிக்கும் போது நெல் விவசாய உற்பத்தியாளரினுடைய சந்தைப்பங்குபற்றலானது-.2944291 அலகினால் குறையும். சந்தை தகவல்கள் குறித்து 4 வரையான கூற்றுக்கள் வழங்கபபட்டு

5 தெரிவுகள் வழங்கப்பட்டன. இதனடிப்படையில் பெறப்பட்டத் தரவுகளானது பின்வருமாறு ஆராயப்படுகின்றது 5 புள்ளி Likert scale கூற்றுக்கள் மூலமான பகுப்பாய்வு முறையில் பெறப்பட்ட இடைப் பெறுமானங்கள் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வீச்சுக்களின் அடிப்படையில் மதிப்பிடப்பட்டு முடிவுகள் பெறப்பட்டுள்ளது.

| **வீச்சு** | **தீர்மானமுடிவுகள்** |
|---|---|
| $1 \leq \ddot{X} < 2.5$ | குறைந்தநிலை |
| $2.5 \leq \ddot{X} < 3.5$ | நடுத்தரநிலை |
| $3.5 \leq \ddot{X} \leq 5.0$ | உயர்ந்தநிலை |

அட்டவணை 2. சந்தைதகவல்கள

| **கூற்றுக்கள்** | **இடை** | **நியமவிலகல்** | **மீடிறன்** | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | 1<br>#<br>% | 2<br>#<br>% | 3<br>#<br>% | 4<br>#<br>% | 5<br>#<br>% |
| சந்தைத்தகவல் பங்குபற்றலைத் தீர்மானிக்கிறது | 4.7500 | .51981 | | | 3 | 17 | 79 |
| சந்தைத்தகவல் பெறுவதில் சிரமம் இல்லை | 4.6600 | .65474 | | | 10 | 15 | 75 |
| சந்தைத்தகவல் பங்குபற்றலுக்குஅவசியமானது. | 4.9500 | .21904 | | | | 5<br>5 | 95<br>95 |
| சந்தைதகவல் கிடைப்பதால் இலாபம் அதிகரிக்கிறது | 5.0000 | .00000 | | | | | |
| சந்தைத்தகவலின் சராசரி | 4.8400 | .20573 | | | | | |

1 –முற்றுமுழுதாகஏற்றுக்கொள்ளவில்லை
2 –ஏற்றுக்கொள்ளவில்லை
3 –நடுநிலை
4 –ஏற்றுக்கொள்கிறேன்
5 –முழுவதுமாகஏற்கின்றேன்

சந்தைத்தகவல்கள் தொடர்பான கூற்றுக்களைத் தொகுத்து நோக்குகையில் இடைத்தரகர்கள் தொடர்பான ஒவ்வொரு கூற்றினதும் விபரத்தின் அடிப்படையில் சராசரி இடை 4.84 ஆகவும் நியமவிலகல் (0.20) ஆகவும் காணப்படுகிறது. கூற்றுக்களின் $\bar{x}$ பகுப்பாய்வுப் பெறுமானம் $3.5 \leq \bar{x} \leq 5.0$ என்ற வீச்சினுள் அமைகிறது. எனவே இடைப் பெறுமதிகள் உயர்ந்த மட்டத்தில் காணப்படுகின்றது. இதனடிப்படையில் சந்தைத் தகவல்கள் விவசாய உற்பத்தியாளரின் சந்தைப் பங்குபற்றலில் அதிகளவில் செல்வாக்கு செலுத்துகின்றது; சந்தைத ̇தகவல்களைச் சிறந்த முறையில் பெற்றுக் கொள்கின்ற நிலையில் நெல் விவசாய உற்பத்தியாளரினுடைய சந்தைப் பங்குபற்றலானது சிறப்பானதாக காணப்படும்.

.

**கருதுகோள் பரீசீலனை 3**

$H_{3A}$: வெருகல் பிரதேசத்தில் நெல் விவசாயிகளின் சந்தைப்பங்குபற்றுதலில் உற்பத்திகாரணிகள் தாக்கம் செலுத்துகிறது. (பண்ணையினுடைய அளவு, வெளியீட்டின் விலை)

பண்ணையினுடைய அளவு ஏற்படுத்தியுள்ள தாக்கத்தை விளக்கும் பிற்செலவு குணக மதிப்பானின் பெறுமதியானது .7720053 ஆகக் காணப்படுகின்றது. இது ஏனைய காரணிகள் மாறாத நிலையில் நெல் விவசாய உற்பத்தியாளரினுடைய பண்ணையின் அளவானது மேலதிகமாக 1 அலகினால் அதிகரிக்கும் போது நெல் விவசாய உற்பத்தியாளரின் சந்தைப் பங்குபற்றலானது .7720053 அலகினால் அதிகரிக்கும் என்பதைவிளக்குகின்றது.

வெளியீட்டின் விலைகுறித்து 4 கூற்றுக்கள் வழங்கப்பட்டு 5 தெரிவுகள் வழங்கப்பட்ட அடிப்படையில் பெறப்பட்ட தரவுகளானது பின்வருமாறு ஆராயப்படுகின்றது.

அட்டவணை 3. வெளியீட்டின் விலை

| கூற்றுக்கள் | இடை | நியம விலகல் | மீடிறன் | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | 1 # % | 2 # % | 3 # % | 4 # % | 5 # % |
| வெளியீட்டின் சாதகமானவிலையான துபங்குபற்றலைஅதிகரிக்கின்றது | 4.39 | 0.584 | | | 55 | 51 | 44 |
| உற்பத்திகளுக்கானநியாயமானவிலையினைப் பெறுகின்றேன் | 2.48 | 0.594 | | 42 | 53 | | |
| ஏனைய சந்தைகளின் விலைகளுக்கேற்பவிலையிடுகின்றேன். | 2.47 | 0.521 | 11 | 51 | 48 | | |
| விலைஉயர்வடையும் போதுஅதிகஉற்பத்திகளைசந்தைப்படுத்துகின்றேன | 3.4 | 0.603 | | 55 | 49 | 46 | |
| வெளியீட்டின் விலையின் சராசரி | 3.185 | 0.278 | | | | | |

வெளியீட்டின் விலை் தொடர்பானஒவ்வொரு கூற்றினதும் விபரத்தின் அடிப்படையில் சராசரி இடை 3.18 ஆகவும் நியமவிலகல் 0.27 ஆகவும் காணப்படுகிறது.

**ஆய்வு முடிவுகளும் விவாதிப்புக்களும்**

இலங்கையில் 70 வீதமானவர்கள் கிராமப்புறங்களில் வசிக்கின்றவர்களாகவும் அவர்களின் பிரதான பொருளாதார நடவடிக்கையாக விவசாயமும் காணப்படுகின்றது. எனவே இலங்கை மக்களின் வாழ்வாதாரத்தோடு ஒன்றிணைந்த பொருளாதார நடவடிக்கையாக விவசாயம் காணப்படுகின்றது. கிராம மக்கள் விவசாயத்தினூடாகதம் உணவுத் தேவைப் பூர்த்தி மட்டுமன்றி

நாட்டின் உணவு நிரம்பலிலும் பங்கெடுக்கின்றனர். இந்நிலையில் ஆய்வுப் பிரதேசத்தில் நெல் விவசாய உற்பத்தியாளர்களின் சந்தைப் பங்குபற்றல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட இவ்வாய்வினூடாக ஆய்வின் நோக்கங்களை அடையும் வகையில் பின்வரும் முடிவுகள் பெறப்பட்டுள்ளன.

ஆய்வினுடைய முடிவுகளின் படி ஆய்வுப் பிரதேசத்தில் விவசாயியினுடைய மாதாந்தவருமானம், பண்ணையின் அளவு, ஆகியவை 1% பொருண்மை மட்டத்திலும் விவசாயியினுடைய குடும்ப அங்கத்தவர் எண்ணிக்கை, சந்தைக்கான தூரம் போன்றவை 5% பொருண்மை மட்டத்திலும் விவசாயியினுடைய கல்விநிலை மற்றும் விவசாயியினுடைய வயது ஆகியவை 10% பொருண்மை மட்டத்திலும் நெல்விவசாய உற்பத்தியாளர்களின் சந்தைப் பங்குபற்றலில் செல்வாக்குச் செலுத்துகின்றன. இருந்த போதிலும் விவசாயியால் ஊழியருக்கு வழங்கப்படும் கூலியினளவு நெல் விவசாய உற்பத்தியாளரின் சந்தைப் பங்குபற்றலில் புள்ளி விபர ரீதியாக பொருண்மைத் தன்மை அற்றதாக காணப்படுகின்றது. மேலும் ஆய்வின் முடிவின்படி நெல் விவசாய உற்பத்தியாளர்களின் சந்தைப் பங்குபற்றலில், கல்விநிலை, விவசாயியின் வயது, குடும்ப அங்கத்தவர் எண்ணிக்கை ஆகியவை எதிர்த்தாக்கத்தினை ஏற்படுத்துகின்றது. அதாவது விவசாயியின் வயதானது அதிகரிக்கின்ற தன்மை விவசாயியினுடைய பங்குபற்றலைக் குறைக்கின்றது. மேலும் வயதின் அதிகரிப்பு நிலையானது இயல்பாகவே உற்பத்தியின் வெளியீட்டைக் குறைக்க அது சந்தைப்பங்குபற்றலைக் குறைக்கின்றது.

ஆய்வில் 5 புள்ளி Likert Scale கூற்றுக்கள் மூலமான பகுப்பாய்வு மூலம் பெற்ற முடிவுகளின்படி சந்தைத் தகவல்கள் மற்றும் விவசாயியினுடைய கடன் பயன்பாடு என்பவை விவசாயியின் சந்தைப்பங்குபற்றலில் உயர் மட்டத் தாக்கத்தினைக் கொண்டுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது. மேலும் வீதி உட்கட்டமைப்பு வசதிகள், மற்றும் வெளியீட்டின் விலை போன்றவை நெல விவசாய உற்பத்தியாளரின் சந்தைப்பங்குபற்றலில் மத்திமமான மட்டத்தில் தாக்கத்தை காட்டி நிற்கின்றமையும் கண்டறியப்பட்டுள்ளது. குறைந்த மட்டத் தாக்கத்தினை விவசாயியினுடைய கால்நடைகளில் இருந்தான வருமானம், மற்றும் பண்ணை சாரா வருமானம் ஆகியவை கொண்டுள்ளன.

**முடிவுரை**

வெருகல் பிரதேசத்தில் நெற ்பயிர்செய்கை மேற்கொள்பவர்களின் சந்தைப்பங்குபற்றலை தீர்மானிக்கும் காரணிகளை வெளிக ்கொணர்ந்த இந்த ஆய்வு, அவர்களின் தனிப்பட்ட குணாம்சங்கள் சார்ந்த அகக் காரணிகளும் சந்தை, சமூகம் சார்ந்த புறக் காரணிகளும் தொடர்புறுவதையும் தாக்கம் செலுத்துவதையும் எடுத்துக்காட்டுகிறது. இவற்றுள் முயற்சியாண்மை சார்ந்த திறன் அம்சங்கள் மேலைத்தேய கலாச்சாரத்துடன் இணைந்தவையாக இருப்பதனால் வெளிநின்ற காரணிகளில் மாற்றம் காணவிழையும் அதே சமயம் மாற்றங்கள் அகக் காரணிகளான உளப்பாங்கு, கருத்துநிலை என்பவற்றிலும் ஏற்பட்டாலன்றி பரிந்துரைகள் செயற்படா. ஆகவே முன்மொழியப் படும் கொள்கைத் தீர்மானங்கள் இவற்றையும் கருத்திலெடுப்பது உசிதமாகும்.

**பரிந்துரைகள்**

ஆய்வுப் பிரதேசத்தில் நெல் விவசாய உற்பத்தியாளர்களின் உற்பத்தி நடவடிக்கை, சந்தைப்படுத்தல் தொடர்பான மேற்பார்வையினை ஒழுங்கு செய்து நெல் விவசாய உற்பத்தியாளர்கள் அமைப்புக்களை நிறுவி தரவுகளைப்

பேணல்; நெல் விவசாய உற்பத்தியாளர்களின் உற்பத்திகளை கொள்வனவு செய்யும் வர்த்தகர்களின் விபரத் திரட்டு பேணப்பட்டு கொள்வனவு விலை தொடர்பான ஒழுங்கு விதிகளைப் பேணல்.

வெருகல் பிரதேசத்தில் பொதுச்சந்தையொன்றை நிறுவி, நெல விவசாய உற்பத்தியாளர்கள் தமது உற்பத்திகளை கொண்டு இடை நடுவரற்ற சந்தைப்பங்குபற்றலை ஏற்படுத்துவதற்கான ஒழுங்கு முறைகளை ஏற்படுத்திக் கொடுத்தல்; உற்பத்தியாளர்களுக்கு களஞ்சிய வசதிகளை ஏற்பத்திக் கொடுப்பதன் மூலம் உற்பத்திகளை உடன் சந்தைப்படுத்தல் என்ற கட்டாய நிலையிலிருந்து பாதுகாத்தல். நெல் விவசாயிகளினுடைய சிறந்த தர முடைய உற்பத்திகளை அறுவடை செய்வதற்கான வழி முறைகளை பெற்றுக் கொடுத்தல்; விவசாயிகள் சந்தை பற்றிய தகவல்களை பூரணமாக உரிய வகையில் அரசிடமிருந்து பெற்றுக் கொள்ள வழிவகை செய்தல..

நெல்விவசாய உற்பத்திகள் பெரிதும் பின் தங்கிய பிரதேசங்களில் காணப்படுகின்றமையால் வீதி உட்கட்டமைப்பு மற்றும் மின்சார வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலம் அவர்களது உற்பத்திகளுக்கு இடை நடுவரற்ற சந்தை வாய்ப்பையும் உற்பத்தி பாதுகாத்தல் வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்தல். விவசாயிகளுக்கு குறைந்த வட்டியில் கடன்களை முறை சார்ந்த நிறுவனங்கள் வழங்குவதற்கு வழிவகை செய்தல்; விவசாயிக்கு கொடுக்கும் கடன்களை விவசாய தேவைகளுக்காகப் பயன்படுத்துவதை கடன் கொடுக்கும் நிறுவனங்கள் முகாமை செய்தல் வேண்டும்.

**உசாத்துணை நூல்கள்**

Aheeyar, M. M. M., Henegedara, G. M., & Rupasena, L. P. (2017). *The cost of production of rice in Kegalle and Kurunegala Districts of Sri Lanka* (No. 115). Hector Kobbekaduwa Agrarian Research and Training Institute.

Alene, A. D., Manyong, V. M., Omanya, G., Mignouna, H. D., Bokanga, M., & Odhiambo, G. (2008). Smallholder market participation under transactions costs: Maize supply and fertilizer demand in Kenya. *Food policy*, *33*(4), 318-328.

Hussain, A. (2012). Impact of credit disbursement, area under cultivation, fertilizer consumption and water availability on rice production in Pakistan (1988-2010). *Sarhad J. Agric*, *28*(1), 95-101.

Mashroofa, M. M., & Senevirathne, W. (2014). Influence of Information Literacy Skills in Accessing Agricultural Information: with special reference to paddy farmers of Ampara district, Sri Lanka.

Pingali, P. L. (1997). From subsistence to commercial production systems: The transformation of Asian agriculture. *American journal of Agricultural economics*, *79*(2), 628-634.

Prasanna, R. P. I. R., Bulankulama, S. W. G. K., & Kuruppuge, R. H. (2012). Factors Affecting FarmersHigher Gain from Paddy Marketing: A Case Study on Paddy Farmers in North Central Province, Sri

Lanka. *International Journal of Agricultural Management and Development (IJAMAD)*, *2*(1047-2016-85454), 57-69.

Soe, W. P. P., Moritaka, M., & Fukuda, S. (2015). An analysis of the factors influencing marketing channel choice by paddy rice farmers in Myanmar. *Journal of the Faculty of Agriculture, Kyushu University*, *60*(2), 535-542.

**3**